செ.வெ.எண் : 32 /ஜூலை நாள் : 14.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

# பத்திரிக்கைச் செய்தி

இராமநாதபுரம் வட்டம், அழகன்குளம் குரூப், பனைக்குளம் ஊராட்சி, கிருஷ்ணாபுரம் கிராமம் புல எண் 24/15பி3சி-ல் இயங்கி வரும் சௌத் கங்கா வாட்டர் டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் கடந்த 2005-ம் ஆண்டு முதல் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தை செயல்படுத்த தொடங்கியதாகவும், இதனால் கிருஷ்ணாபுரம் கிராமத்தில் வசிக்கும் சுமார் 150 குடும்பங்கள் பாதிக்கப்படுவதாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்களுக்கு புகார் வந்தது.

அதனடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின்பேரில், இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.ரா.பேபி அவர்களின் தலைமையில், இராமநாதபுரம் உதவி காவல் கண்காணிப்பாளர், கோட்டப் பொறியாளர் (மாசுகட்டுபாட்டு வாரியம்), செயற்பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வாரியம்), செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை (கட்டடம் மற்றும் பராமரிப்பு), மாவட்ட நியமன அலுவலர் (உணவு பாதுகாப்புத் துறை), உதவி செயற்பொறியாளர் (நீர் வள ஆதார அமைப்பு) பரமக்குடி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), வட்டாட்சியர் ஆகிய அலுவலர்கள் அடங்கிய குழுவினர் சவுத் கங்கா நிறுவனம் மற்றும் சுற்றுப்புறங்களில் 08.05.2017 அன்று புலத் தணிக்கை மேற்கொண்டனர்.

இக்குழுவினர் அளித்த இடைக்கால அறிக்கையின்பேரில் மேற்படி நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் கூட்டுக் குழுவின் முன்பு 23.05.2017 அன்று நேரில் ஆஜராகி ஒரு மாத காலத்திற்குள் கட்டமைப்புகளை உரிய வரைமுறைகளின்படி சரி செய்து கொள்வதாக உறுதியளித்திருந்தும் 05.07.2017 அன்று மீள்தல ஆய்வு செய்தபோது முந்தைய நிலையிலேயே மேற்படி நிறுவனம் இயங்கி வந்தது கண்டறியப்பட்டதால் கூட்டுக்குழு அன்றைய தினமே மீண்டும் கூடி அளித்த பரிந்துரையின்பேரில் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியரால் மேற்படி நிறுவனத்தின் கட்டமைப்புகளில் கண்டறியப்பட்ட குறைபாடுகளை சரி செய்து உரிய வரைமுறைகளின்படியான தக்க சான்று பெற்று கூட்டுக் குழுவின் முன் சமர்ப்பிக்கும் வரை 05.07.2017 அன்று முதல் மேற்படி சவுத் கங்கா நிறுவனத்தின் உப்பு நீரை நன்னீராக்கும் செயல்பாடுகள் தற்காலியமாக நிறுத்தி வைக்கப்பட்டு தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**